**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

O.S.No.659/2020 பெயர் : பூவாத்தாள் நாள் : 16.06.2026

வா.சா.2 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.2 : பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

தாவா எந்த சொத்து சம்மந்தமாக தாக்கல் செய்யப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியும், சேனாதிபதிபாளையத்தில் உள்ள சொத்து சம்மந்தமாக இந்த வழக்கு நடந்து வருகிறது, அதன் சர்வே எண் எனக்கு தெரியாது. மேற்படி பூமி 2 ஏக்கர் பூமி ஆகும். அந்த பூமிக்கு வடக்கே விஸ்வநாதன் என்பவர் பூமி, தெற்கே காந்திமதி என்பவர் பூமி, கிழக்கே ஓடை, மேற்கே வாய்க்கால் செல்கிறது. மேற்படி பூமியை 1950-ல் ராம நாடார் வாங்கினார். ராம நாடாரின் அப்பா பெயர் எனக்கு தெரியாது. ராம நாடார் எந்த ஆண்டு இறந்தார் என்று எனக்கு தெரியுமா என்றால், எனக்கு ஞாபகம் இல்லை. ராம நாடாரின் மனைவி பெயர் என்ன என்றால், எனக்கு தெரியாது. ராம நாடார் கிரையம் பெற்ற கிரையப்பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேனா என்றால், செய்துள்ளேன். ராம நாடாருக்கு 2 பையன், 3 பெண்பிள்ளைகள். வழக்கு தாக்கல் செய்த கண்ணம்மாள் சேனாதிபதிபாளையத்தில் வசித்து வந்தார், தற்போது அவர் உயிருடன் இல்லை. 2-ம் வாதி தங்கமணி யார் என்று எனக்கு தெரியாது. 3-ம் வாதி சிவகாமி நல்லம்மாள் என்பவரது மகள். நல்லம்மாள் வெங்கரையாம்பாளையத்தில் குடியிருந்தார். அவர் எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. நல்லம்மாளின் கணவர் பெயர் எனக்கு தெரியாது. நல்லம்மாளுக்கு 3 பெண்கள், 1 பையன். தங்கமணி, சிவகாமி, ரஞ்சிதா, மணி ஆகியோர் வாரிசுகள். பழனிச்சாமி வெங்கரையாம்பாளையத்தில்

குடியிருந்தார். அவர் எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. முத்துசாமி என்பவர் எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. முத்துசாமி வாரிசு, பழனிச்சாமி வாரிசு எப்போது சொத்துக்களை விற்றார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால், சுமார் 5, 6 வருடங்கள் இருக்கும். தேதி, மாதம், வருடம் என்னால் குறிப்பிட்டு கூறமுடியாது என்றால், சரிதான். பழனிச்சாமி, முத்துசாமி வாரிசுகள் கிரையம் கொடுத்த பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்தேனா என்றால், இல்லை. சொத்தில் கிணறு உள்ளதா என்றால், உள்ளது. அந்த கிணற்றை யார் வெட்டினார்கள் என்றால், ராம நாடார் தான் வெட்டினார். எந்த வருடம் வெட்டினார் என்ற விபரம் எனக்கு தெரியாது. பழனிச்சாமி, முத்துசாமி வாரிசுகளிடமிருந்து சொத்தை யார் வாங்கினார்கள் என்றால், எனக்கு தெரியாது. தாவா சொத்தை தவிர ராம நாடாருக்கு வேறு சொத்துக்கள் உள்ளதா என்றால், இல்லை. முத்துசாமி வாரிசுகள் சொந்த வீட்டில் தான் குடியிருந்து வருகிறார்கள். அவர்களின் சொந்த வீடு ராம நாடாரின் பூர்வீக சொத்து என்றால், சரிதான். பழனிச்சாமி வாரிசுகள் சொந்த வீட்டில் தான் குடியிருந்து வருகிறார்கள். அவர்களின் சொந்த வீடு ராம நாடாரின் பூர்வீக சொத்து என்றால், சரிதான். பழனிச்சாமி வாரிசுகள், முத்துசாமி வாரிசுகள் ஆகியோர்களுடன் கண்ணம்மாள், தங்கமணி, சிவகாமி, ரஞ்சிதா, மணி, வள்ளியம்மாள் ஆகியோருடன் சுமுகமான போக்குவரத்தில் தான் இருந்து வருகிறார்கள் என்றால், சரிதான். அதனால்தான், முத்துசாமி வாரிசுகள் குடியிருக்கும் வீட்டையும், பழனிச்சாமி வாரிசுகள் குடியிருக்கும் வீட்டையும் தாவாவில் சேர்க்கவில்லை என்றால், சரிதான். முத்துசாமி வாரிசுகளுக்கும், பழனிச்சாமி வாரிசுகளுக்கும், இந்த தாவா தாக்கல் செய்துள்ள 1 முதல் 6 வாதிகளுக்கும், எந்த ரத்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால், சரியல்ல,

சம்மந்தம் உள்ளது. 1 முதல் 4 பிரதிவாதிகள், 5-ம் பிரதிவாதிக்கு உரிய மறுபயனை பெற்றுக்கொண்டு, தாவா சொத்தை கிரையம் செய்துக் கொடுத்துள்ளார் என்றும், அதன் பின்னிட்டு 5-ம் பிரதிவாதி தன்னுடைய சுவாதீனத்தில் இருந்த தாவா சொத்தை 6-ம் பிரதிவாதிக்கு உரிய மறுபயன் பெற்றுக்கொண்டு கிரையமும், சுவாதீனமும் செய்துக் கொடுத்துள்ளார் என்றால், சரிதான். அதன்பின்னிட்டு தான் 6-ம் பிரதிவாதி அந்த சொத்தில் கிணர் வெட்டினார் என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. தற்போது கிணறு வெட்டி நல்ல பாசனவசதி ஆனபின்னிட்டு, 1 முதல் 4 பிரதிவாதிகள் சொத்துக்கு சம்மந்தமில்லாத வாதிகளின் பூமிகளுக்கு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், சரியல்ல. ராம நாடார் வாங்கியதாக கூறியுள்ள சொத்துக்கும், தாவா சொத்துக்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்று சொன்னால், சரியல்ல.